Registered as a News Paper

மக்களகள 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 30 (15-09-1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 209

## தென்தமிழீழ துயர் துடைப்பு நிதி; இரண்டாம் பகுதி கையளிப்பு

தென் தமிழீழ மக்களின் துயர் துடைப்பிற்காக திரட்டப்பட்ட நிதியின் இரண்டாவது பகுதியை வழங்கும் வைபவம் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளருமாகிய கரிகாலன், திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன், மன்சூர், சுதர்சன் ஆகியோர் தென்தமிழீழ (4ஆம் பக்கம் பார்க்க)

# பாராளு. பதிவேட்டில் இடம்பெறவில்லை

# குற்றவியல் மனு காலாவதியானது

## பிரேமதாசா சபாநாயகருக்குக் கடிதம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது கொண்டுவரப்பட்ட குற்ற விசாரணை மனு பாராளுமன்ற பதிவேடுகளில் இடம்பெறாமையால் காலாவதியாகிவிட்டது என்றும, இதனால் பாராளுமன்றத்துல் இந்த மனு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலையை அடைந்துள்ளது என்றும் சிறிலங்கா ஜனாதிபதி பாராளுமன்ற சபாநாயகருக்குக் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக சபாநாயகருக்கு பிரேமதாசா எழுதிய கடிதத்தின் முழு விபரமும்வருமாறு:-

அன்புள்ள

சபாநாயகர் அவர்களே

1991 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதிய தங்களின் கடிதம் சம்பந்தமாக 1991 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய 677 இலக்கம் 15ஆம்இலக்கத்தைக்கொண்ட ... தெரியும். மாண்புமிகு சட்டமா அதிபருக்கு எனது செயலாளரால் அனுப்பப்பட்ட 1991 செப்ரெம்பர் 11 ஆம் திகதிய கடிதத்தின் நிழல் புகைப்படப் பிரதி ஒன்றையும், தமது ஆலோசனைகளை வழங்கும் முகத்தால் சட்டமா அதிபர் எனது செயலாளருக்கு அனுப்பிய 1991 செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிய பதிலின் நிழற் ... திகதிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறான 70-1 உறுப்புரிமையின் 'இ' பிரிவில் உள்ள காப்பு வாசகமானது பாராளுமன்ற அமர்வில் ஒத்திப்போடும் வகையில் 1991 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிய பிரகடனத்தைச் சேர்த்த தருணத்திலிருந்து வலுவற்ற நிலைக்கு வந்துள்ளதெனவும், தாங்கள் குறிப்பிட்ட அறிவித் ...

அனுமதி பெறப்பட்ட

## மருந்துப்பொருள்களுக்கு தாண்டிக்குளத்தில் தடை

கனகராயன்குளம் பகுதியில் செயற்படும் மிருக வைத்திய சாலைக்கென்று அனுப்பிவைக்கப்பட்டிருந்த மருந்துப் பொருள், தாண்டிக்குளம் சிறிலங்கா இராணுவ சோதனை முகாம் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

தற்போது இந்த மிருக வைத்தியசாலை, கனகராயன் குளம் விவசாயப் போதனாசிரியர் விடுதியில் செயல்படுகிறது என்றும், இதற்கென அனுப்பி வைக்கப்பட்ட மருந்துப் பொருளே தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (இ)

## 11 வருடங்கள் புனரமைக்காத மட்டக்களப்பு வைத்தியசாலை

(மட்டக்களப்பு)

மேலும் அவர் தனது அறிக் ... பற்றாக்குறையும் சுகாதாரச ...

## திடீர் மூடுவிழா

எந்த விதமுன்னறிவித்தலும் இல்லாது கொத்மலையில் தேயிலைத் தொழிற்சாலை ஒன்று திடீரென மூடப்பட்டு விட்டது.

இதனால் நூற்றுஆறு இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். திடீரென சம்பளம் நிறுத்தப்பட்டதால் இந்தக் குடும்பங்கள் பசிபட்டினியால் வாடுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## கொழும்பு நோயாளர் சமுகம்தரவும்

(நமது நிருபர்)

யாழ்ப்பாண வைத்தியசாலையில் பதிவு செய்து கப்பலில் கொழும்பு செல்வதற்கு அனுமதிபெற்ற நோயாளர்கள் திங்கட்கிழமை காலை 7 00 மணிக்கு வைத்தியசாலைக்கு சமுகம் தரும்படி பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் வருபவர்கள் இரண்டு நாட்களுக்கு போதுமான தண்ணீர் மற்றும் உணவு வகைகளையும் எடுத்து வருமாறும் கோரப்பட்டுள்ளது.

## 3ஆவது வாரமாகதொடர்ந்து மணலாற்றில் மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ச்சியாக மூன்றாவது வாரமாக சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளின் முகாம்களை அழிக்கும் நோக்குடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கடந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதி முதல் முன்னேறப் பெரும் பிரயத்தனம் செய்து வருவது தெரிந்ததே. இராணுவத்திற்கு உதவியாக கடற்படை பீரங்கிக் கப்பல்கள், விமானப்படை விமானங்கள் ...

30 ஆம் திகதிய 677 இலக்கம் 15 ஆம் இலக்கத்தைக்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1991 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிய பிரகடனத்தின்மூலம் பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது என்பது தங்களுக்குத்

பிய 1991 செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிய பதிலின் நிழற்படப்பிரதி ஒன்றையும் தங்கள் தகவலுக்காக இத்துடன் அனுப்பி உள்ளேன்.

அரசியலமைப்பின் தங்களால் எனக்கு அனுப்பப்பட்ட 1991 ஆகஸ்ட் மாதம் 28 ஆம்

நிலைக்கு வந்துள்ளதெனவும், தாங்கள் குறிப்பிட்ட அறிவித்தல் தீர்மானம் பாராளுமன்ற அமர்வினை ஒத்திப்போடும் பிரகடனத்தைச் செய்த தருணத்தில் ஒழுங்கு நூலிலும் அல்லது வேறு எந்த ஒழுங்குப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமதாசாவின் கடிதத்தை லலித் முற்றாகப் புறக்கணிப்பு

(லண்டன்)

சிறிலங்கா ஜனாதிபதிமீது குற்ற விசாரணைமனு சம்பந்தமாக சட்டமா அதிபர் கூறியதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் கூற்றை முன்னைநாள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி முற்றாக நிராகரித்துள்ளார்.

அவர் பி. பி. சி. வானொலிக்கு நேற்று இரவு அளித்த பேட்டியின் போது:

தனக்கெதிரான குற்றச்சாட்டு மனு காலங்கடந்தது என்று சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருப்பதாக ஜனாதிபதி ஆர் பிரேமதாசா அறிவித்துள்ளது அவரின் பிரட்டல் தந்திரங்களில் ஒன்று என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கையில் அதிக அதிகாரம் இருக்கும் என்றால், இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை தேவையா, இல்லையா? என்பது குறித்து கருத்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் லலித் அத்துலத்முதலி கோரியுள்ளார்

# சபாநாயகர் மொகமட் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை?

சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்க தரப்பினர் ஈடுபட்டுவருவதாக கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் இடை நிறுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான முன் அறிவித்தலைச் செய்ய முடியுமா என்பது பற்றி அரச தரப்பு சட்டத்தரணிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

## பாராளுமன்றத்திற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் இருபத்து நான்காம் திகதி பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி பிரேமதாசா சம்பிரதாயபூர்வமாக தொடங்கி வைக்க விருப்பதை முன்னிட்டு பாராளுமன்றத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணிப்புரையின் கீழ் படைக்கல சேவிதர் திணைக்களம் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## அரசாங்க பாராளுமன்ற குழுக் கூட்டம்

அரசாங்க பாராளுமன்ற குழுவின் கூட்டம் எதிர்வரும் பதினெட்டாம் திகதி மூன்று மணிக்கு நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

1991 தொடக்கம் 1995 வரையான நாட்டில் செய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அரசினர் வைத்தியசாலை கடந்த பதினொரு வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாததனால் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியிலும் தனது மருத்துவசேவையைத்தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது என்று மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். ரி. அருளானந்தம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்ததாவது,

இவ் வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தும் இயங்குவதற்கும் நோயாளர்களுக்கு வேண்டிய வசதிகளை வழங்கக் கூடியதுமான போதிய இட வசதிகள் மற்றும் தேவையான மருந்துவர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள் இல்லை.

வைத்தியசாலைக்கான நீர் விநியோகப் பற்றாக்குறையும், மலசலகூடம் மற்றும் சழிவகற்றும் தொகுதி ஆகியவற்றின் பற்றாக்குறையும் சுகாதாரச் சீர்கேட்டைத்தோற்றுவித்துள்ளன என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாப்பிரிவு நோயாளர் வார்ட்டுக்களிலும் இடநெருக்கடி காரணமாக நோயாளர்கள் நிலத்திலும், நடைபாதை

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்பது இலங்கைத் தமிழர் தமிழ் நாட்டில் கைது

(மதுரை)

ஏர்க்கோட்டை என்றஇடத்தில் தங்கம், டீசல் எண்ணெய் மற்றும் சிறிலங்கா ரூபாநோட்டுக்களை வைத்திருந்த எட்டுப்பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்

இதில் ஏழுபேர் இலங்கைத் தமிழர்கள். இவர்களிடமிருந்து 22 கிராம் தங்கமும், 400 லீற்றர் டீசலும், ரூபா 2500 சிறிலங்கா நோட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அதேவேளை இராமநாதபுர மாவட்டம் தனுஷ்கோடி அருகில் உள்ள அரிஞ்சமுனை என்ற இடத்தில் இரண்டு இலங்கைத் தமிழர்கள்நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களிடமிருந்து 60 ஜெலற்றின் குச்சுகளும், 80 டெற்ரனேற்றர்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றிடங்களை நிரப்ப புதிய நியமனம் வேண்டாம்

மாகாண அரசாங்க சேவையில் உள்ள வெற்றிடங்களை தற்போது அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர ஊழியர்களைக் கொண்டு நிரப்புமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வெற்றிடங்களைவெளியார்களைக் கொண்டு நிரப்புவதை நிறுத்தி வைக்குமாறு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 26/91 இல் அரசாங்க நிர்வாகச் செயலாளர், அனைத்து மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும் மாகாணசபை அலுவலகங்களின் செயலாளர்களுக்கும் பணித்துள்ளார்.

இச்சுற்று நிருபத்தின் பிரகாரம் மாகாணசபை நிர்வாக சேவை மற்றும் பொதுச் சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் அரசாங்க சேவையில் உள்ளவர்களைக் கொண்டே நிரப்பப்படும்.

ணுவத்திற்கு உதவியாக கடற்படை பீரங்கிக் கப்பல்கள், விமானப்படை விமானங்கள் தொடர்ச்சியான குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமுள்ளன. இக் கடுமையான முப்படைகளின் தாக்குதலுக்கும் ஈடுகொடுத்து விடுதலைப் புலிகள் சளைக்காது போரிட்டு வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று சிப்பாய்கள் வவுனியாவில் தலைமறைவு

வவுனியா கந்தபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் இராணுவ காவலரண்களில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த மூன்று படையினர் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் மேற்படி பகுதியில் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபடையினரைக் காணவில்லை என்று சக இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டிருந்தனராம்.

தலைமறைவானபடையினர் தமது வீடுகளுக்கு ஓடிச்சென்றிருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. (தி)

# பாதுகாப்புத் தொடருமென ஜெயலலிதா நம்பிக்கை

(சென்னை)

தமது பாதுகாப்பிற்காக மத்திய அரசு அனுப்பி வைத்திருக்கும் தேசிய பாதுகாப்பு படையின் சேவைகள் தொடருமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இது குறித்து பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தம்மிடம் நேரடியாகவும், கடித மூலமாகவும் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். தமிழகப் பொலிசாருக்கு தேசிய பாதுகாப்புப் படையினர் போன்று சிறப்புப்பயிற்சி அளிக்கப்பட்ட பின்பு தேசிய பாதுகாப்புப் படையினரை மீளப் பெறலாம் என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

"நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்"

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

(B/3115)

# பட்டப்படிப்புகள் கல்லூரி

## புதியமாணவர்களை அனுமதித்தல்

**1991/1992**

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் 28-9.91ல்

**ஆரம்பமாகவுள்ளன**

க. பொ. த உயர்தரம் 3பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ கலைமுதற் தேர்வு G. A. Q.

★ வணிகமுதற் தேர்வு FIRST IN COMMERCE

★ விஞ்ஞானமுதற் தேர்வுG.S.Q. (புள்ளி விபரவியல்)

பேராதனைப் பல்கலைக்கழகவிரிவுரைகள் யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/48 ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் கடந்த 14 வருடங்களாக பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கி வரும் ஒரேயொரு நிறுவனம்.

(B/3091)

# தாதிய சேவை

அவசர கால தாதிய சேவையில் கடமையாற்றுவதற்கு எங்கள் நிறுவனத்தில் கல்வி கற்ற சகல உதவித் தாதிகளும் கடமைக்கு சமுகமளிக்கும் பொருட்டு 16-9-91 திங்கட் கிழமை பாடசாலையில் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

Dr. V. P. சுந்தரராஜன்
அதிபர்
சாயி மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(B/3113)

# 90-ம் நாள் நினைவலைகள்



## 2ஆம் லெப். நிசாந்தன்

[மாணிக்கராசா - ஜெயராசா]

| | |
|---|---|
| வீரஜனனம் | வீரமரணம் |
| 30 08-1972 | 16-06-1991 |

வவுனியாவில் 16-06-91 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

ஒரு கணம் மௌனம் மௌனத்தில் அஞ்சலி
தலையைத் தாழ்த்தி விழிகளை உருக்கி
சுதந்திரம் பெறும் நெஞ்சுடன்
உன்னை நினைக்கின்றேன்.

பொற்றொழிலாளர் வீதி,
இத்தியடி சங்கத்தானை,
சாவகச்சேரி.

அன்புச் சகோதரன்
மா. யோகராசா
(பெரியவன்)

(R/1743)

# நாடக வாழ்த்து

தமிழீழத் தொழிலதிபர்
சிவதர்மவள்ளல்
கனகராசா

## வாழ்த்துகிறார்

இன்று 15-09-91 ஞாயிறு பி. ப. 3 மணிக்கு யாழ் கைலாசபதி கலையரங்கில் சுந்தர்மடம் சனசமூக நிலைய கலை கலாசாரப் பேரவையின் தயாரிப்பில் மேடையேறும் புலவர் செ. து. தெட்சணாமூர்த்தியின்

"இந்த மண் எங்களின் சொந்தமண்"

என்னும் தமிழீழ வரலாற்று நாடகம் மேலான நற்தாக்கத்தை எமது சமுதாயத்தில் மாணவர், இளைஞர், விருத்தர், கற்றோர், மற்றோர் மத்தியில் ஏற்படுத்தும் என்று நம்பி, இந்நாடகத்தையும் தயாரிப்பாளர்களையும் பாராட்டுகிறேன். இந்நாடகம் ஆயிரமாயிரம் அரங்கங்களில் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

க. கனகராசா ஜே.பி.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை.

(B/3124)

தியாகத் துளி : 1

## பொறுப்பு !

விருப்பு வெறுப்புகளை
வென்று - தியாக
நெருப்பின் அலைகளைத்
இன்று - உன்
பொறுப்பை உணர்ந்து நீ
சென்றாய் !

— வாஞ்சிநாதன்

# வரி விளம்பரம்

**கல்வி**

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், மற்றும் விஷேட, திறமைச் சித்தியடைந்து அரசாங்க உத்தியோகத்தைப் பெறவிரும்புபவர்களுக்கும் 40 மணித்தியாலத்திற்குள் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி.

(R/ 1746)

**பெற்றுக் கொள்ளவும்**

உடுப்பிட்டியைச் சேர்ந்த தம்பிராசா. வசந்தகுமார் என்பவரது அடையாள அட்டை (620830941 X) கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

**சங்காபிஷேகம்**

நவாலி வடக்கு விசாலாட்சி சமேத வில்வநாதசுவாமி ஆலயத்தில் நாளை திங்கள் காலை பத்து மணியளவில் நவோத்திர சங்காபிஷேகமும் அதைத் தொடர்ந்து மாலை நான்கு மணியளவில் விசேட தீபாராதனையும் இடம்பெறவுள்ளது

# நினைவு சுமக்கின்றோம்...

**1991 - 09 - 15**





# தியாகி திலீபனின்

# நான்காம் ஆண்டு நினைவாக...



எமது மக்கள் பரிபூரணமாக எழுச்சிகொள்ள வேண்டும். இன்றுகூட எம்மக்கள் மத்தியில் அந்த நிலை இல்லாதது எமக்கு வருத்தத்தை தருகிறது. எமக்கு ஆறாத சோகத்தை ஏற்படுத்துகின்றது. அந்நிலைமை மாற்றி அமைக்கப் பட வேண்டும். எமது அடிப்படை உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதற்காக நாம் எழுச்சியடைய வேண்டும்.

இப்படி எழுச்சியுடன் நாம் போராடினால் எவரும் இப் போராட்டத்திற்கு மதிப்பளித்தே ஆகவேண்டும். ஒன்றைக் கூறுகின்றேன். மக்கள் அனைவரும் போராட்டத்திற்குத் தயாரானால் நிச்சயமாக தமிழீழத்தை அமைக்கமுடியும். ஆனால் அந்தச் சூழ்நிலை இல்லாதது எமக்கு வேதனையைத் தருகின்றது.

- திலீபன்

## மானிப்பாய் கோவில்பற்று வர்த்தகர் சங்கம்

யாழ். வீதி, (B/3123) மானிப்பாய்.





கப்டன் ஹீரோராஜ்

கப்டன் ஜெகன்/அக்காச்சி

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா கடற் படையினரின் பீரங்கித் தாக்குதலினால் பலியான கர்ப்பிணிப் பெண்

1989ஆம் ஆண்டு கொத்தீக்குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
லெப்.பூபதி (அ. உதயகுமார் - திருமலை)

நீர்வேலியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரமரணமெய்திய
கப்டன் ஜெகன்/அக்காச்சி (சிவகுருநாதன் சிறீகாந்தன் - நீர்வேலி)
மதன் (விநாசித்தம்பி மதன்ராஸ் - நீர்வேலி)

கிளிநொச்சியில் இந்தியப்படையினருடனான மோதலின் போது வீரமரணமெய்திய
ரசிதரன் (இராசப்பிள்ளை ரசிதரன் - பன்னாலை)

திருநெல்வேலியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்இளைஞன்
1990ஆம் ஆண்டு யாழ். கோட்டை சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
கப்டன் ஹீரோராஜ் (சண்முகசுந்தரம் பிரபாகரன் - 'இரத்தின கிரி' அச்செழு, நீர்வேலி

வவுனியாவில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த
றஜீவ்/ரகீம் (தாரினி நுலானி - பட்டாணிச்சூர் புளியங்குளம், வவுனியா)

மூதூர், நீலாப்பளைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய
லெப்.பார்த்தீபன் (கனகசிங்கம் கோடீஸ்வரன் - கங்குவேலி, மூதூர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

: விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3117)

சிந்தனைக்கு

நம் செயலை நல்லதாகவோ கெட்டதாகவோ ஆக்குவது நமது சிந்தனைகளே.

— றாபர்ட் ஹெர்றிக்

ஈழநாதம்

61, மகேந்திரவீதி, யாழ்ப்பாணம். 15-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் [illegible] நிர்வாகபீடம் [illegible]
[illegible]

# குற்றப் பிரேரணையில் பிரேமா தப்பினார்?

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட அரசியற் குற்றச் சாட்டுப் பிரேரணை பாராளுமன்றம் ஒழுங்குமுறைப் புத்தகத்திலோ, நிகழ்ச்சி நிரல் பதிவேட்டிலோ சபா நாயகர் பதியத் தவறியமையால் காலாவதியாகியுள்ளதாக எம். எச். முகமட்டிற்கு ஜனாதிபதி பிரேமதாசா அனுப்பிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இதன் மூலம் பாராளுமன்றத்தில் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியாத நிலையை அடைந்து விட்டதாகவும் சிறிலங்கா ஜனாதிபதி சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

சிறிலங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு பாராளுமன்றச் சபாநாயகரின் விசுவாசமின்மையே அண்மையில் சிறிலங்காவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிக்குக் காரணமாகும். பிரேமதாசா மீது கொண்டு வரப்பட்ட 'இம்பீச்மண்ட்' மனுபற்றி அவருக்கு முன்னரே அறிவித்திருந்தால் இந்த அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்திருக்காமல் தடுக்கப்பட்டிருக்கும், அல்லது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கலாம்.

பிரேமதாசாவிற்கு எதிரான எம். எச். முகமட்டின் நடவடிக்கை ஓர் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் முகமட்டின் கோரிக்கை பிரேமதாசாவினால் புறக்கணிக்கப்பட்டமையே இந்த முரண்பாட்டிற்குக் காரணமாகும்.

இதேவேளை பிரேமதாசாவிற்கு எதிரான குற்றம் மறு விவகாரத்தில் நேற்றுவரைப்பலமான நிலைமை

# புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கு

1960 கள் 1970 களில் ஜப்பான் பிரதானமாக ஏற்றுமதிப் பொருளாதாரத்தை கொண்ட நாடாய் இருந்தது. ஆனால் 1980களில் அது வெளிநாட்டுப்பொருளாதாரத்திற்கு பிரதானமாகத் திரும்பியது.

1981 ஆம் ஆண்டு அமெரிக்கா, ஜப்பானின் கார் இறக்குமதிக்கு அமெரிக்காவில் பெரும் கட்டுப்பாடுகளை விதித்தது (எவ்வளவுதான் சந்தைப் பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் என அமெரிக்கா கூறிக்கொண்டாலும் அது ஜப்பானிய கார் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதித்ததை இங்கு காணலாம்) இதனால் ஜப்பான் தனது உற்பத்திக்கான முதலீட்டை அமெரிக்காவுக்கு மாற்றியது. அமெரிக்கா, ஜப்பானிய முதலீட்டை வரவேற்றது. இவ்வாறு ஜப்பானிய கார் தொழிலைக் காட்டிப் பெட்டி இறக்குமதிக்கும் கட்டுப்பாடு விதிக்கவே அதன் உற்பத்தியையும் ஜப்பான் அமெரிக்காவிற்கு மாற்றியது. இவ்வாறாக அமெரிக்காவில் ஜப்பானது உற்பத்தித் தொழிற்சாலைகள் வருடா வருடம் 14.2 வீதம் அதிகரிக்கின்றது 2000 ஆம் ஆண்டு வரை இந்த அதிகரிப்பு விகிதம் நீடிக்கும். 1980 ஆம் ஆண்டு 36 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த ஜப்பான் வெளிநாட்டு முதலீடு (FDI) 1988 ஆம் ஆண்டு 186.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. இத்தகைய போக்கு குறுங்காலத்தில் ஜப்பானிய முதலாளிகளுக்கு இலாபகரமாக அமையும். ஆனால் நீண்டகாலப் போக்கில் இது ஜப்பானுக்கு பாதகமானது.

இங்கு அமெரிக்காவிற்கான ஜப்பானிய வெளிநாட்டு முதலீடு ஜப்பானுக்கு எதிர்மறையான விளைவையே நீண்டகாலத்திற்கு தரும் இத்தகைய முதலீடு ஏற்றுமதியை இல்லாது செய்யும் ஜப்பானின் இறுது வெளிநாட்டு முதலீடு உள்நாட்டு உற்பத்தி அனுபவத்தை இழக்கச் செய்துவிடும் என்று இவர் கருதுகிறார். மொத்தத்தில் ஜப்பானது இன்றைய பொருளாதாரப்போக்கு ஜப்பானுக்கு கூடாதது என்பதே இவரது விமர்சனம். பாவனையாளர்களின் தேவையை விடவும் அதிகமான பண்டங்களை அழிவுகள் செய்ய வேண்டும் என்று உற்பத்தியாளன் அவாவும் சந்தை தேடும் போட்டியும், பிழையான பொருளாதாரப் பங்கீட்டைக் காட்டுகின்றது. இந்தப் பிழையான பொருளாதார முறையின் கனிதான் ஏகாதிபத்தியம். சமூகச் சீர்திருத்தம்தான் இதற்கான ஒரே ஒரு மருந்து என்று ஜே. ஏ. கொப்சன் என்பவரது கருத்தை முன்வைத்து தன் கட்டுரையை முடித்துள்ளார்.

திடீர் ஆதிக்க வைது ஜப்பானின் கைக்கு மாறுவதை அமெரிக்கர்கள் விரும்பமாட்டார்கள் என்ற கி-யின் கூறிய கருத்தையும் நாம் கவனத்தில் எடுத்தல் நலம்.

எனவே அந்த நேரத்திற்கு ஏற்ற நடவடிக்கைகளின் மூலம் ஜப்பானை ஓர் எல்லைக்கப்பால் வளரவிடாது தடுப்பதில் அமெரிக்கா அக்கறையாக உள்ளதென்பதை மேற்போந்த கருத்துக்களின் மூலம் உணரலாம்.

ஜப்பான் தன்னை மீற விடாது பார்த்துக் கொள்ளுவதில் அமெரிக்கா அக்கறையாக உள்ளது அதே வேளை ஜப்பானிடம்இருந்துபெற வேண்டியதைப் பெறுவதிலும் அமெரிக்கா அக்கறையாகஉள்ளது.

கும் வர்ஜனத்துக்குவராத [illegible] காணப்படுகிறார்.

இவ்வாறு தந்திரோபாயங்கள் இருக்கின்ற போதிலும் இதற்குரிய தர்க்கபூர்வமான இயங்கியல் விதியையும் நோக்குவோம். வர்க்க உறவு, வர்க்கப்போட்டி, வர்க்கப்பகைமை, என்ற வகையில் வர்க்கப் பகைமை வளர்கிறது. ஜப்பானும் அமெரிக்காவும் ஏகாதிபத்தியக் கூட்டாளிகள் என்ற

பகுதி - 3

வகையில் முதலில் அவர்களிடையே ஓர் உறவும் பின்பு படிப்படியாக ஏனைய கட்டங்கள் வளர்ச்சி அடையலாம். இன்று இவ்விரு நாடுகளுக்கும் இடையேயுள்ள உறவும், வர்க்கப்போட்டியும் உள்ளது. எனவே எதிர்காலத்தில் இவை பகைமை மிக்கனவாக மாறாதென்று சொல்வதற்கில்லை. இந்த தசாப்தத்தில் பகைமைத் தன்மை ஏற்படுவதற்கான வாய்ப்பு மிகக்குறைவு.

இப்பொழுது ஏற்பட்டுள்ள புதிய உலகப் பொருளாதாரச் சூழலை பங்கீடு போடுவதில் இருவரும் குறுங்காலத்தில் ஒன்றிணைந்திருக்கலாம். ஏற்கனவே கூறுவதுபோல அமெரிக்கா தனக்கு விருப்பமானவற்றை அடைவதற்கு ஜப்பானை பயன்படுத்துவதற்கான தேவையும் வாய்ப்பும் இப்போது உண்டென்றே கூற வேண்டும்.

அடுத்து சீனாபற்றி அமெ[illegible]

சீனா வளர்வதைக் கவனமாகவும் அமெரிக்கா பார்த்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி றூஸ்வெல்டின் ஆலோசகராய் இருந்த என். ஜே. ஸ்பெக்மன் 1940 களின் மத்தியில் ஒரு நூலை எழுதினார்.

உண்மையில் சீனாவின் வளர்ச்சிக்குத் தடைசுவர் கட்டுவதில் அமெரிக்கா எப்பொழுதும் அக்கறையாகவே உள்ளது. இன்று அமெரிக்காவுடன் சீனாவால் போட்டியிட முடியாது. ஆயினும் ஆசியாவிலுள்ள பலம் பொருந்திய நாடு என்ற வகையில் அமெரிக்காவின் கண்கள் சீனாவின்மீது கூர்மையாகவே உள்ளன. சீனாவில் பெருமளவுக்கு உள்நாட்டு ஸ்திரத் தன்மை உண்டு. இந்தியாவைப்போல பெருமளவில் தேசிய இனப் பிரச்சினைகளைக் கொண்ட நாடல்ல. இன்று சீனா வர்த்தக ரீதியில் அமெரிக்காவில் தங்கியுள்ளது. அதேவேளை அமெரிக்காவிற்கு சீனா சிறந்த சந்தையாகவும் உள்ளது. எனவே அண்மைக் காலத்தில் உறவு நிலை உடையமுடியாது.

சீனாவும், ஜப்பானும் ஒன்று சேருமானால் உலகச் சக்தி நிலை பெரிதும் மாற்றமடையும். கிழக்காசியாதான் உலகிலேயே மிக முன்னணி அரசாக அமையும். எதிர்காலத்தில் ஜப்பான், சீனாவுடன் சேருவதுதான் புத்திசாலித்தனமானது என கீ சின் கூறுகிறார். ஜப்பானது தொழில்நுட்ப பலமும் சீனாவின் ஏனைய வளங்களும் ஒன்று சேருமிடத்து அதன் வளர்ச்சி மிகப் பெரிதாய் இருக்கும். சீனாவையும் ஜப்பானையும் இணைய விடாது அமெரிக்கா பார்த்துக்கொள்வதில் அக்கறையாய் இருக்கும். அதனை மீறி இரண்டும் இணைந்தால் (அவ்வாறு இணைவதாயின் மிக நீண்டகாலம் எடுக்கும்)

வடம்.கோட்டைப்பகுதியில் வீரமரணமடைந்த மாவீரர் கப்டன் ஹீரோராஜின் நினைவுதினம் இன்றாகும். அவரின் நினைவாக மூ திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்டுள்ள சர்வதேச அரசியல் ஒழுங்கு என்னும் நூலின் தொடர் இன்று வெளியாகிறது.

இதேவேளை பிரேமதாசாவிற்கு எதிரான குற்றம் மறு விவகாரத்தில் நேற்றுவரைப்பலமான நிலைமையில் இருந்த சபாநாயகரின் நிலை பிரேரணை பதிவு செய்யப்படாமல் காலாவதியாகி விட்டது என்ற அறிவிப்பால் சற்று ஆட்டம் கண்டுள்ளதெனலாம். பிரேரணை காலாவதியாகி விட்டது என்ற பிரேமதாசாவின் அறிவிப்பு அவரின் ஒருமிரட்டல் நடவடிக்கை என எதிர்க்கட்சிகள் அறிவிப்பினும் அவ்வறிவிப்புச் சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் செய்யப்பட்டமையால் முற்றாக நிராகரித்து விடமுடியாது.

பிரேமதாசாவின் இவ்வறிவிப்பு சட்டரீதியாக சரியாக இருப்பின் அரசாங்கத்திற்கும் அவருக்கும் பாராளுமன்றத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி தற்காலிகமாக ஓய்ந்ததெனலாம். ஆனால், பிரேமதாசாவின் ஆட்சிக்கான அச்சுறுத்தல் முற்றாக நீங்கி விட்டது எனச் சொல்வதற்கில்லை.

இதுவரை ஐக்கிய தேசியக்கட்சியில் குற்றச்சாட்டுப் பிரேரணையில் கையொப்பம் இட்டவர்களில் எட்டுப் பேர் தவிர ஏனையோர் யார் என்பது இன்னமும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்குத் தெரியாது. ஆகையினால் எதிர்கால பாராளுமன்றநடவடிக்கையின் போது என்ன நடக்கும் எனத் திட்டவட்டமாகக் கூறிவிடமுடியாது இது தொடர்பாக ஏற்கனவே இறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர் 'இம்பீச்மன்ட்' பிரேரணை தோல்வி அடையுமாயினும் தமது கட்சி அவசரகாலச்சட்டத்திற்கு எதிராகவாக்களிக்கப்போவதாக அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார். இந்நிலையில் பிரேமதாசாவின் அதிருப்தியாளர்களும் சேருமிடத்தில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படலாம். சுருக்கமாகக் கூறின் தற்பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான ஆபத்து நீங்கினும் ஐக்கியதேசியகட்சி அமைச்சரவைக்கான ஆபத்து நீங்கியதாகக்கொள்ளமுடியாது.

ஆகையினால் அரசியல் நெருக்கடி நீங்கிவிட்டதெனக் கொள்ள முடியாது. அதிகாரப் போட்டியும் பணப்பரிமாற்றமும் அந்நிய நாடுகளின் ஊடுருவல்களும் மலிந்து விட்ட சிறிலங்கா அரசியலில் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும் எனக் கணிப்பிடுவது சிரமமான காரியமாகும். பிரேமதாசா கூறுவது சரியானால் அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கையாக பாராளுமன்றத்தைக்கூட அவர் கலைக்கக்கூடும். கடந்தவாரம் கடைசியாக நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுகூட்டத்திலும் தேர்தலுக்கு ஆயத்தமாகுமாறும், பத்து லட்சம் கட்சி உறுப்பினர்களைச் சேகரிக்குமாறும் பிரேமதாசா கேட்டுக் கொண்டமையும் இங்கு கவனிக்கத்தக்கது. இதேவேளை சிறிலங்கா அரசியலில் எவ்வகை திடீர் மாற்றங்கள் நடந்தாலும் எதிர்கால அரசியல் குழப்பங்களும், மாற்றங்களும் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

முதலீடு ஏற்றுமதியை இல்லாது செய்யும் ஜப்பானின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கும். உற்பத்தி அமெரிக்காவிற்கு மாறுவதன் மூலம் 1985 — 87 காலப்பகுதியிலே ஜப்பானின் 2,80,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்தனர்.

இத்தகைய நிகழ்வினால் ஜப்பானில் தொழிற்துறைத் தொழிலாளர்கள் சேவைத்துறையினர் அதிகரிக்கலாம். ஆனால் ஜப்பானியத் தொழிற்துறை அமெரிக்காவிற்கு மாறுவதன் மூலம் ஜப்பானியத் தொழில்நுட்பத்தை அமெரிக்கா பெறவும் கூடி யதைப் பெறுவதிலும் அமெரிக்கா அக்கறையாகவுள்ளது. ஜப்பானை பகைத்து தன்னைக் கடந்த நிலைக்குச் செல்ல விட்டால் ஜப்பானின் தொழில் நுட்பத்தையும், ஏனையவளங்களையும் பெறமுடியாத நிலை அமெரிக்காவிற்கு ஏற்பட்டுவிடும். ஒருபுறம் ஜப்பானின் வளர்ச்சியை எல்லைப்படுத்துவதிலும் மறுபுறம் அதனைத் தன்னுடன் அணைத்து வைத்துப் பெறக்கூடியதைப் பெறுவதிலும் அமெரிக்கா பெரிதும் அக்கறையாக உள்ளது அமெரிக்கா ஜப்பானை அணைத்து வைத்திருக்கவேண்டும் என்ற கொள்கையை அதி இப்போது உணர்ந்துள்ளது கூற வேண்டும்.

அடுத்து சீனாபற்றி அமெரிக்காவின் கொள்கை. தற்போதைக்கு சீனாவால் அமெரிக்காவிற்குப் பிரச்சினை இல்லை. ஆனால் சீனா மீது அமெரிக்காவிற்கு நீண்டகால கண்ணோட்டம் உண்டு

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் ஜப்பான் தோற்கடிக்கப்பட்ட பின்பு அங்கு சீனாவை ஒரு பலம் பொருந்திய அரசாக வளரவிடாமலும், கைத்தொழில் வளர்ச்சியடைந்த ஐக்கியப்பட்ட (அவ்வாறு இணைவதாயின் மிக நீண்டகாலம் எடுக்கும்) அல்லது சீனா மட்டுமே நீண்டகாலத்தில் எல்லை மீறிய பலத்தைப் பெற்றுவிட்டால் அதனைக் கட்டுப்படுத்த இந்திய - சீனா யுத்தமொன்றை அமெரிக்கா தோற்றுவிக்கலாம் அவ்வாறு ஒரு யுத்தம் ஏற்படுமாயின் மஞ்சள் இனத்துக்கு எதிரான யுத்தமாய் அது அமையும். அதில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் இந்தியா பக்கம் நிற்கும்.

(தொடரும்)

## இஸ்ரேலுக்கு எதிராக புஷ்ஷின் ரத்ததிகாரம்

அமெரிக்கப் பாராளுமன்றம் இஸ்ரேலிய வீட்டுவசதி குறித்த ஆயிரம் கோடி டொலர் திட்டத்திற்கான மசோதாவை நூற்றி இருபது நாட்களுக்குள் நிறைவேற்றினால் தமது ரத்து அதிகாரத்தினால் அதனை நீக்கப்போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழன் வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ் புஷ் மேற்காசிய சமாதானத்துக்காக மத்தியஸ்தம் செய்வதில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு வாய்ப்பினை பராமரிக்க தாம் இவ்வாறு செய்யப்போவதாக தெரிவித்தார்:

## வழிபாட்டு இடங்கள்

## குறித்த சிறப்பு விதி மசோதா நிறைவேறியது

(டில்லி)

வழிபாட்டு இடங்கள் குறித்த சிறப்பு விதிகள் மசோதாவை இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது

1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 ஆம் திகதி இருந்த நிலையில் வழிபாட்டு இடங்களை பேணிப் பாதுகாக்க இந்த மசோதா வழிவகுக்கும்.

ஆனால் தாவாவிற்கு உட்பட்ட அயோத்தி பிரச்சினை இந்த மசோதாவின் வரம்பிற்குள் வரவில்லை

ராஜ்ய சபாவில் இந்த மசோதா கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. லோக்சபாவில் இந்த மசோதா செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே.

## பிரதம அதிதி கௌரவம் இறுதி நேரத்தில் பறிப்பு

(கொழும்பு)

கொழும்பு மஹாநாம கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற 'மஹாபொல' கொண்டாட்டங்களில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவிருந்த லலித்அத்துலத்முதலியின் அந்தஸ்து நீக்கப்பட்டு விட்டதாக இறுதி நேரத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் முழுவதும் இடம்பெற்ற இந்த கொண்டாட்டத்தின் கடைசிநாள் நிகழ்ச்சிகளுக்கு பிரதம அதிதியாக முன்னர் செய்த ஏற்பாட்டின்படி முன்னாள் கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித்அத்துலத்முதலி கலந்து கொள்வதாக இருந்தது.

ஆனால், இறுதி நாள் நிகழ்ச்சிகள் இடம்பெறவிருந்த அன்றைய காலை அவருக்கு வந்த தொலைபேசி அழைப்பு அந்தஸ்திலிருந்து அவர் நீக்கப்பட்டு விட்டதாக தெரிவித்தது

ஆனால் லலித்அத்துலத்முதலி சாதாரண மக்களோடு மக்களாக நுழைவு கட்டணம் செலுத்தி 'மஹாபொல' வைபவத்துக்குச் சென்றார்.

இவர் கப்பற்துறை அமைச்சராக இருந்தபோதே 'மஹாபொல' புலமைப்பரிசிலை அறிமுகப்படுத்தியிருந்தார் என்பது தெரிந்ததே

லலித் அங்கே சென்றபோது அவருக்கு நண்பர்கள், தொகுதி மக்கள் எல்லோரும் கூடி பெரும் வரவேற்பு உபசாரம் செய்தனர்.

## முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கொத்தணி அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறியின் தொடர்ச்சி இன்றும், நாளையும் யாழ். இந்துக் கல்லூரியில் மீண்டும் நடைபெறவுள்ளதால் சகல கொத்தணி அதிபர்களும் இப் பயிற்சி நெறியில் தவறாது பங்குபற்றி பயிற்சியை முடிக்குமாறு யாழ் கல்விப்பணிப் பாளர் கேட்டுள்ளார். (மு)

# நிபந்தனைகளை மீறினால் விளைவு கடுமையாக இருக்கும்

## -ஐ. நா. ஈராக்கிற்கு எச்சரிக்கை

(ஜெனிவா)

ஐ. நா. பாதுகாப்புச் சபை போர்நிறுத்த நிபந்தனைகளை மீறுவதாக ஈராக்கின் மீது கடுமையான குற்றம் சாட்டியுள்ளது. ஈராக்கின் வான் பரப்பில் ஐ. நா. கண்காணிப்புக்குழு ஐ. நா. ஹெலிகொப்டர்களில் பறந்து கண்காணிப்புச்செய்வதற்கு ஈராக் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருவதையடுத்து இக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஈராக் ஐ. நா. கண்காணிப்புக்குழுவுடன் பூரணமாகஒத்துழைக்க வேண்டுமென பாதுகாப்புச் சபைத் தலைவர் ஈராக்கிய தூதுவரிடம் கோரியுள்ளார். அவ்வாறில்லாவிடில் விளைவுகள் மோசமாக இருக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதனிடையில் வளைகுடாப் போர் முடிவுற்றதன் பின்னர் ஈராக் பிரதமராகப் பதவி வகித்த திரு. கமாதி நேற்று முதல் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று ஈராக் அறிவித்துள்ளது.

# ஆப்கானுக்கான உதவிகள் வல்லரசுகள் நிறுத்தம்

(மொஸ்கோ)

சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் 1992 ஜனவரி முதல் ஆப்கானிஸ்தானுக்கான தமது இராணுவ உதவிகளை விலக்கிக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளன.

அரச முறைப்பயணம் ஒன்றை மேற்கொண்டு மொஸ்கோவந்திருக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கருக்கும், சோவியத் வெளியுறவு அமைச்சருக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளையடுத்து இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சோவியத் ஆதரவு ஆப்கான் அரசுக்கு ரஷ்யாவும், அமெரிக்கா சார்பு ஆப்கான் கெரிலாக்களுக்கு அமெரிக்காவும் வழங்கி வந்த இராணுவஉதவிகள் நிறுத்தப்படும்.

ஆப்கான் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் படியும். தேர்தலை நடத்துமாறும் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஐ நா.சபையை வலியுறுத்தவுள்ளன.

## அறிவித்தல்

புத்தூரில் அமைந்துள்ள எமது சூர்யா மருந்தகம் நேற்று முன் தினம் இரவு (13.9.91) கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நாம் எமது மருந்து மற்றும் பொருளகளுக்கு மறைமுக விலை (கோட்வேட்) போட்டுள்ளோம். எனவே தயவுசெய்து ஏதாவது சந்தேக நபர்கள் சந்தேகமான முறையில மருந்து மற்றும் பொருள்களை விற்பதற்கு வந்தால் அறியத் தருமாறு சூர்யா மருந்தகத்தினர் வேண்டுகின்றனர்.

(R/1749) -- சூர்யா மருந்தகம்

## கியூபா அமெரிக்காமீது குற்றச்சாட்டு

(ஜெனிவா)

ஐ நா. பொதுச் சபையில் அமெரிக்காமீது கியூபா கடுமையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது. கியூபாவிற்கு எதிராகப் பொருளாதார மற்றும் நிதித் தடைகளை அமெரிக்காஏற்படுத்திவருவதாகவே கியூபா தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் பெரஸ்டிகொயிலருக்கு கியூபா அரசு எழுதியுள்ள கடிதமொன்றிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

### 46ஆம் நாள் நினைவஞ்சலி



## சிறப்பான ஏற்பாடுகள்

தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவாக வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை நடைபெற வுள்ள தடகள விளையாட்டு விழாவிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா நிர்வாகப் பிரிவினரால் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டு விழாவில் 60 மைல் தூர சைக்கிள் ஓட்டப் போட்டியுடன் சுமார் 25 விளையாட்டுக்கள் இடம்பெற வுள்ளன. (தி)

ஒன்பது

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட இருவரும் மதுரையில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

அரசாங்க

படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள்தொடர்பாகஅங்கு ஆராயப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

பாராளு

பத்திரத்திலும் சேர்க்கப்படாதிருந்தது காரணமாக எழுபது-நான்கு உறுப்புரிமையின் ஏற்பாடுகளின்பாற்படுவதுஇல்லை எனவும் மாண்புமிகு சட்டமா அதிபர் ஆலோசனை கூறியுள்ளார் என்பதைத் தாங்கள் அவதானிக்கலாம்.

அவ்வறிவித்தல் தீர்மானம் 70-நான்காம்உறுப்புரிமையின் ஏற்பாடுகளின் பாற்படுவது இல்லைஎன மாண்புமிகு சட்டமா அதிபர் வழங்கி உள்ள ஆலோசனையின் பேரில் 1991 செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி அன்று ஆரம்பமாகும் அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது அரசியல் அமைப்பின் படி அது சம்பந்தமாக தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியாது என்பதையும் நீங்கள் காணலாம். அதன் வண்ணம் இந்த அறிவித்தல் தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்கு நூலிலும் அல்லது

# கிழ. ஐரோப்பிய நாடுகளை ஐரோ.சமூகத்தில்சேர்க்கவும்

## - ஜோன் மேயர்

(பரிஸ்)

ஐரோப்பாவின் முன்னாள் கம்யூனிச நாடுகளை ஐரோப்பிய சமுதாய அமைப்பில் உறுப்பு நாடுகளாக சேர்த்துக் கொள்வதன் தேவையை பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன் மேயர் வலியுறுத்தியுள்ளார்.

பரிஸில் நடைபெற்ற ஐரோப்பிய கன்சவேட்டிவ் தலைவர்களின் மாநாடொன்றில் பேசிய ஜோன் மேயர், ஐரோப்பிய சமுதாயத்தின் இப்போதைய பன்னிரண்டு உறுப்பு நாடுகளின் அரசியல் பொருளாதார ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் இந்த யோசனையை தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதே நேரம் ஐரோப்பிய சமுதாயத்தில் கம்யூனிச நாடுகள் சேர்க்கப்படுவதை இந்த அமைப்பின் பல நாடுகள் எதிர்க்கின்றன என்று பி.பி.சி தெரிவித்தது.

# அஸாம் தீவிரவாதிகளுக்கு சீனாவில் பயிற்சி -ஸைக்கியா

(டில்லி)

அஸாமிலுள்ள மாஓ கெரில்லாக்களுக்கு சீனா உதவுவதாக அஸாம் முதலமைச்சர் ஸைக்கியா குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவர் சீனாவின் யுன்னான் மாகாணத்தில் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி பயிற்சிமுகாமொன்றைநடாத்திவருவதாகவும் தெரிவித்தார்

3 ஆவது

வதாக களத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இம்மோதலில் நாளாந்தம் பல இராணுவத்தினர் கொல்லப்படுவதுடன் படுகாயமடைந்தும் வருகின்றனர்.

11 வருடங்கள்

களிலும் படுத்துறங்குகிறார்கள். இங்கு இயங்கும் தாதியர் பயிற்சிப் பாட்சாலைக்கும் தேவையானளவு கட்டட வசதிகள் இல்லை.

சுமார் 406,000 சனத்தொகையுடைய மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கும் பொலநறுவை, திருக்கோணமலை, அம்பாறை ஆகிய மாவட்ட மக்களுக்கும் இந்த வைத்தியசாலை சிகிச்சை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும்இவ்வைத்தியசாலை


## ஏஞ்சலாவிற்கு மக்கள் அஞ்சலி

மணலாறு மாவட்டத்தில் சென்ற வியாழக்கிழமை இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை ஏஞ்சலா (சுப்பிரமணியம் செல்வி-ஈச்சமோட்டை) என்ற மாவீரரின் புகழுடல் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது பெருந்தொகையான மக்கள் கலந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர் பின் இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த மலர்கொடி கலையரசன், சுந்தரலிங்கம் ஆகியோர்உரையாற்றினர்(43

## வெடிப் பொருள்கள் சில மீட்பு

வவுனியா மாவட்டத்தில் உள்ள புளியங்குளம்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை மதன்
(வினாசித்தம்பி - மதனதாஸ்)

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 06.09.1972 | 15.09.1989 |

ஓ ... ... ... ... ... மதனே!
உன் சொந்த நலன்களை விட
தேச நலன்களை நீ முதன்மைப் படுத்தினாய்
துப்பாக்கி உன் தோளில் இடம் பிடித்தது
உன் சொந்த மண்ணில் காலடி வைக்க
முயன்ற சமூக விரோதப் பேய்களுடன்
நீர்வேலியில் நீ களமாடினாய்
உன் இருப்பை தேசம் இழந்தது
ஆனாலும், காலத்தை வென்றவன் — நீ,
உனக்கு --'' மரணம் வாழ்வின் முடிவல்ல''

மதனா வீதி,
நீர்வேலி.

அம்மா, அப்பா,
அண்ணன்.

(B/3103)



### லெப். கர்ணன்
(தம்பிராசா பவனேஸ்வரன்)

வீரஜனனம் 22-5-72
வீரமரணம் 31 07-91
புளியம்பொக்கணை,
கிளிநொச்சி.

கருணையுள்ளம்
கொண்டவன் நீ —
கர்ணன் என்று பெயர்
கொண்டாய்
மரணம் உன்னைத்
தேடவில்லை —
தருணம் வந்த போது
நீயே ... வீர ...
மரணம் அதனைத்
தேடிக் கொண்டாய்!

நண்பர்கள் மத்தியில்
உன்னை த்தேடிப்
பார்த்தோம்
உன்னைக் காண
வில்லை ...
புரிகிறது ... நீ ...
விடுதலைக் காற்றுடன்
கலந்து விட்டாய் என்று!

- குடும்பத்தினர்
(R/1748)

தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்கு நூலிலும் அல்லது வேறு எந்த ஒழுங்குப்பத்திரத்திலும் தற்பொழுது சேர்த்துக் கொள்ளப்படவியலாது.

தங்கள் விசுவாசமுள்ள
ஜனாதிபதி
ஆர். பிரேமதாசா.

---

தென்தமிழீழ மக்களின் சார்பில் கலந்துகொண்டனர். இவ்வைபவத்தில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள்மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் பத்து லட்சம் ரூபாவினை திரு. கரிகாலன் அவர்களிடம் கையளித்தார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின்நிதிப் பொறுப்பாளர் திரு. குணம் ஐயா அவர்கள் திருமலை மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் ஐந்து லட்சம் ரூபாவினைதிரு. ரூபன் அவர்களிடம் கையளித்தார்.

நிதியினைப் பெற்றுக் கொண்ட திரு. ரூபனும் கரிகாலனும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,தென்தமிழீழ மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் துயர்துடைப்பிற்காக வட தமிழீழ மக்கள் காட்டிய அக்கறையையும் அவர்களின் உணர்வுகளையும் தாங்கள் புரிந்து கொள்வதாகக் குறிப்பிட்டனர். இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா, விடுதலைப் புலிகள் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த ரவி, வசந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே இந் நிதியின் முதற்பகுதியான பத்து லட்சம் ரூபாவினை மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தளபதி கருணா அவர்களிடம் பிரதித்தலைவர் கையளித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

தக்கது.

மேலும்இவ்வைத்தியசாலையின் உள்ள தொலைத் தொடர்புகளும் சீராகஇயங்குவதில்லை.

இவ்வாறான நிலைமையில் இருக்கும் இவ்வைத்தியசாலையைச் சீராக்குவதற்கு சுகாதார அமைச்சோ அன்றி ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களோ இதுவரை முன்வரவில்லை.

வவுனியா மாவட்டத்தில் உள்ள புளியங்குளம் காட்டுப்பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் சில ஆயுதங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

ரி 56 ரக மகசீன் - 06, ஐ எம். ரவை-360, ஜே.ஆர். கைக் குண்டு- 3, கெல்மற் - 1 ஆகியவையே கண்டெடுக்கப்பட்டவை ஆகும்.

## 91-ம் நாள் நினைவஞ்சலி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 17 | 17 |
| -- | -- |
| 10 | 06 |
| -- | -- |
| 1975 | 1991 |



### வீரவேங்கை கீதா
(தர்சினி திருச்செல்வம்)

ஈர் எட்டு ஆண்டுகள் இம்மண்ணில்
நீர் வாழ்ந்த வாழ்வு நீர்க்குமிழி போலாகாது
தர்சினி எனும் பெயர் தரணியில் வாழும்
ஊர் உறவு சுற்றம் எல்லாம் உன்னை வாழ்த்தும்!

தாயக விடுதலையில் தாகம் கொண்டதால்
பாயும் புலியாகிப் பாசறைக்குச் சென்றாய்
வீரம் விதைத்து வென்றிடுவாய் என்றிருந்தோம்
ஈரம் விளைந்தது. ஈகத்தால் உள்ளம் நெகிழ்ந்தது.

தொண்ணூறு நாள் போனதம்மா
கண்ணில் நீருடனே கரைந்தது காலம் - இம்
மண்ணில் உன் வாழ்வு எம்
எண்ணமதில் நிறையும் இலட்சியம் ஈடேறும்.

அம்பனை,
தெல்லிப்பளை.
(R/1736)

பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.